இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு, "யோனாவின் மகனான சீமோனே, நீ பேறுபெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன்: உன் பெயர் பேதுரு; இந்தப் பாறையின் மேல் என் திருஅவையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடை செய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்" என்றார். (மத் 16:17-19)

# அன்னை மரி விண்ணேற்பின் மாபெரும் வெற்றியை நாம் கொண்டாடுகிறோம்

**வத்திக்கான்**: புனித கன்னி மரியாவின் விண்ணேற்பானது சந்திரனில் நீல் ஆர்ம்ஸ்ட்ராங் பதித்த முதல் காலடியைவிட எண்ணற்ற, மகத்தான வெற்றிக்குரியது எனத் திருத்தந்தை பிரான்சிஸ் புகழாரம் சூட்டினார். "மனிதன் சந்திரனில் முதல் காலடியைப் பதித்தப்போது, உரைத்த ஒரு சொற்றொடரான, 'இது மனிதனுக்கு ஒரு சிறிய முன்னேற்றப்படி, மனிதகுலத்திற்கு ஒரு மாபெரும் பாய்ச்சல்' என்பதை நினைவூட்டினார். இன்று, அன்னை மரியின் விண்ணேற்பின் எல்லையற்ற பெரிய வெற்றியை நாம் கொண்டாடுகிறோம் என்றார். நமது அன்னை விண்ணகத்தில் கால் பதித்தார்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் ஆகஸ்ட் 15-ம் திகதி அன்று கூறினார்.

"நாசரேத்தின் சிறிய கன்னியின் இந்த வெற்றிவாகை மனிதகுலத்தின் மிகப்பெரிய பாய்ச்சல்" என்று அவர் மேலும் கூறினார். வத்திக்கானின் திருத்தூது அரண்மனையின் சன்னலிலிருந்து புனித பேதுரு சதுக்கம் முழுவதும் கூடியிருந்த திருப்பயணிகளிடம் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ், மரியாள் விண்ணகத்திற்குள் வந்தபோது, வாழ்க்கையின் இறுதி இலக்கை அவர் அடைந்தார் "கீழே உள்ளவற்றை நாடக்கூடாது, அவை நிலையற்றவை, ஆனால் மேலே உள்ளவை எப்போதும் நிலைத்திருப் பவை," என்பது அவரது படிப்பினையாகும். .உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 அன்று மரியாவின் விண்ணேற்பு திருப்பலியைக் கொண்டாடுகிறார்கள். இந்த திருவிருந்து மரியாவின் பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவை நினைவுகூர்கிறது என்று அவர் கருத்துரைத்தார்.

"நமது அன்னை விண்ணகத்தில் கால் வைத்தார்: அவரது ஆன்மாவோடு மட்டுமல்ல



அவளுடைய உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" என்று அவர் கூறினார். "நம்மில் ஒருவர் விண்ணகத்தில் உடலோடு வாழ்கிறார் என்பது நம்பிக்கைத் தருகிறது: நாம் விலைமதிப்பற்றவர்கள், மீண்டும் உயிர்த்தெழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை இதன் வழி புரிந்துகொள்கிறோம். நம் உடல்கள் ஒன்றும் இல்லாமல் போக கடவுள் அனுமதிப்பதில்லை.

கடவுள், 'தாங்கள் பெரியவர்கள் என்ற எண்ணத்தை விட்டு, வாழ்க்கையில் கடவுளுக்கு அதிக இடம் கொடுப்பவர்கள் மூலம் செயல்படுகிறார்; தம்மை நம்புகிறவர்களிடத்தில் அவர் தனது பரிவிரக்கத்தை விரிவுபடுத்துகிறார்; மேலும் தாழ்ச்சி கொண்டோரை உயிர்த்தெழச் செய்கிறார்" என்றார்.

விண்ணேற்பு பெருவிழார நாளன்று, கத்தோலிக்கர்களை மரியாவின் திருத் தலங்களுக்குச் செல்லுமாறு திருத்தந்தை பிரான்சிஸ் ஊக்குவித்தார். கன்னி மரியாவின் சாட்சிய வாழ்வு ஒவ்வொரு நாளும் கடவுளைப் புகழ்வதற்கான ஒரு நினைவூட்டலாகும் என்று அவர் மேலும் கூறினார். கடவுளின் தாய் தனது பாடலில் பாடியதுபோல, "என் ஆன்மா ஆண்டவரை மாட்சிப்படுத்துகிறது" என்று அவரும் உரக்கக் கூவினார்.

"நாம் நம்மை நாமே கேட்டுக்கொள் வோம்," என்று அவர் அவரது மறை யுரையைத் தொடர்ந்தார். 'நாம் கடவுளைப் புகழ்கிறோமா? அவர் நமக்காகச் செய்கிற பெரிய காரியங்களுக்காகவும், ஒவ்வொரு நாளும் அவர் நமக்குக் கொடுக்கும் ஒவ்வொரு ஆசீருக்காவும் நாம் அவருக்கு நன்றி செலுத்துகிறோமா? சிந்தித்துப் பார்ப்போம் என்றார்.

"அன்னை மரியாவைப் போலவே, ஆண்டவர் செய்யும் பெரிய காரியங்களையும் நாம் நினைவில் வைத்திருந்தால், ஒரு நாளைக்கு ஒரு முறையாவது நாம் அவரை 'மாட்சிபடுத்துவோம்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

அனைவருக்கும், குறிப்பாக நோய்வாய்ப் பட்டவர்கள், முன்னணி பணியாளர்கள் மற்றும் தனித்திருக்கும் யாவருக்கும் அவர் அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

"நம்முடைய தாயிடம் ஒவ்வொரு நாளும் விண்ணகக் கடவுளிடம், நமக்காகப் பரிந்துரைக்கும்படி மன்றாடுவோம், அவருக்கு நன்றி கூறுவோம்" என்று திருத்தந்தை அனைத்து மக்களையும் கேட்டுக்கொண்டார்.

# பினாங்கு, மாநகர் பங்கில் ஆர்.சி.ஐ.ஏ அருட்சாதனக் கொண்டாட்டம்

**பினாங்கு:** நீண்டகாலக் காத்திருப்புக்குப் பிறகு, மாநகரப் (சிட்டி) பங்கில் முதியோருக்கான புகுமுக அருட்சாதனக் கொண்டாட்டம் நிறைவேற்றப்பட்டது.

தேர்வுச் செய்யப்படவர்களில் ஏழு உறுப்பினர்கள் திருமுழுக்குப் பெற்றனர். மேலும் இருவர் ஆகஸ்ட் 16 அன்று மாநகர் வியாகுல அன்னை பங்கில் உறுதிப்பூசுதல் அருள்சாதனத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. .

அன்று தேர்வுச் செய்யப்பட்டோரிடையே, நீண்ட கால இடைவெளிக்குப் பின் முதல் முறையாக திருப்பலியில் கலந்து கொண்டோரையும், தேர்வுச் செய்யப்பட்ட வேட்பாளர்களின் கத்தோலிக்கரல்லாதக் குடும்ப உறுப்பினர்களையும் ஒருங்கேக் கண்டது மனதைக் கவரும் காட்சியாக இருந்ததாக பலர் கருத்துரைத்தனர்.



*வேட்பாளருக்குத் திருமுழுக்கு அளிக்கும் பேரருட்தந்தை அலோசியஸ் தான்*

பங்குத் தந்தை தந்தை அலோசியஸ் தான் மற்றும் துணை பங்குத் தந்தை அருள்தந்தை பிரான்சிஸ் அந்தோணி இருவரும் பங்கு மக்களை ஐந்து மாத இடைவெளிக்குப்பின் மீண்டும் கடவுளின் திருப்பீடத்திற்கு வரவேற்றனர்.

"தேர்வுச் செய்யப்பட்ட இந்த வேட் பாளர்கள், தொடர்ந்து தங்கள் நம்பிக்கையில் விடாமுயற்சியுடன் இருந்தார்கள் என்றும், கத்தோலிக்க திருஅவைக்குள் உறுப்பினராகும் அன்று வரை அவர்கள் கத்தோலிக்க நம்பிக்கையில் உறுதியாக இருந்ததற் காக பேரருள்தந்தை அலோசியஸ் தான் நன்றி நவில்ந்தார். அவர் அவர்களின் நம்பிக்கை பயணமானது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதலுடன் முடிவடையாது என்பதை நினைவூட்டி யதோடு, அவர்கள் கடவுளின் தயவுடன் ஒரு புதிய வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கு கிறார்கள் என்பதில் தாம் பேறுவகைக் கொள்வதாக தமது மனமிகழ்வைப் பகிர்ந்து கொண்டார்.

"இப்போது நீங்கள் கிறிஸ்துவின் சீடர்களாக இருப்பதால், நீங்கள் எங்கள் சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கிறீர் கள், “நீங்கள் திருஅவை'; உங்கள் நம்பிக்கையை, நம்பிக்கையுடன் தொடர்ந்து வாழுங்கள்" என்று அவர் களை வாழ்த்தினார்.

# திருமுழுக்கு அருளடையாளம் குறித்து விசுவாச கோட்பாட்டு பேரவை விளக்கம்

"தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால், **நாங்கள் உனக்கு திருமுழுக்கு கொடுக்கிறோம்"** என்பது உட்பட, சில பங்குகளில் திருமுழுக்கு அருளடையாளத்தில் பயன்படுத்தப்படும் மாற்றியமைக்கப்பட்ட சடங்குமுறைகள் செல்லுபடியாகாது என்று, விசுவாசக் கோட்பாட்டுப் பேரவை, ஆகஸ்ட் 06, அன்று அறிவித்தது.



*திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றும் திருத்தந்தை பிரான்சிஸ் (ANSA)*

திருமுழுக்கு அருளடையாளம் நிறைவேற்றப்படும் சடங்குமுறை குறித்து விளக்கம் அளித்துள்ள வத்திக்கானின் நம்பிக்கை கோட்பாட்டு பேரவை, திருஅவையால் அங்கீகரிக்கப்பட்ட திருவழிபாட்டு விதிமுறைகளின்படி நிறைவேற்றப்படும் திருமுழுக்கு அருளடையாளமே சரியானது, உறுதியானது என்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

திருத்தந்தையின் அனுமதியுடன் இந்த அறிவிப்பை வெளியிடுவதாகக் குறிப்பிட்டுள்ள அந்தப் பேரவை,, ***"தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் நான் உனக்கு திருமுழுக்கு கொடுக்கிறேன்"*** என்பது கத்தோலிக்கத் திருஅவையின் சடங்குமுறையில் உள்ளது என்றும், மாறாக ***"நாங்கள் திருமுழுக்கு அளிக்கிறோம்"*** என்று வழங்கப்படும் திருமுழுக்கு, திருஅவையின் விதிமுறையின்படி செல்லாதது என்றும் கூறியுள்ளது.

### திருமுழுக்கு அளிப்பவர் கிறிஸ்து

திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றும் திருப்பணியாளர், "நான் உனக்கு திருமுழுக்குக் கொடுக்கிறேன்" என்று கூறும்போது, அவர், அதை தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு சடங்குமுறையாக இல்லாமல், கிறிஸ்து அதில் உடனிருக்கிறார் என்பதன்பேரில் நிறைவேற்றுகிறார் என்றும், அதுவே உண்மையாக திருஅவையின் இயல்பை வெளிப்படுத்துவதாக உள்ளது என்றும், அந்த கூறியது.

ஒருவருக்கு திருமுழுக்கு அருளடையாளத்தை நிறைவேற்றும்போது, கிறிஸ்துவே அதை நிறைவேற்றுகிறார், அந்த நிகழ்வில் ஆண்டவரே முக்கிய பங்கு வகிப்பவர் என்று, இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் கொள்கை விளக்கம் (Sacrosanctum Concilium) திருவழிபாடு எண் 28) கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது, விசுவாசக் கோட்பாட்டுப் பேரவை.

தந்தை - தாயின் பெயராலும், ஞானப் பெற்றோர் பெயராலும், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், திருமுழுக்கு வழங்கும் அருட்தந்தை (திருத்தொண்டர்) ஆகியோரின் பெயராலும், தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் நான் உனக்கு திருமுழுக்கு கொடுக்கிறேன் என்ற சொற்கள், திருமுழுக்கு அருளடையாளம் வழங்கும்போது சொல்லப்படுவது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த விசுவாசக் கோட்பாட்டுப் பேரவை இவ்வாறு விளக்கம் அளித்துள்ளது.

*மேரி திரேசா-வத்திக்கான் செய்தி*

# கொரோனா வைரஸ் தடுப்பூசி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்- திருத்தந்தை

COVID-19-க்கான தடுப்பூசிக்கு, பணக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டால் அது வருத்தமளிப்பதாக இருக்கும்! இந்த தடுப்பூசி உலகளாவிய அனைவருக்கும் கிடைத்திட வழிகாண வேண்டும். இது தனியொரு நாட்டின் சொத்தாக மாறினால் அது பெரும் பாவச்செயலாகும் என்று திருத்தந்தை கருத்துரைத்தார்.

இவரது கருத்துக்கள் கடந்த செவ்வாயன்று உலக உடல்நல அமைப்பின் தலைவர், சில நாடுகள் கண்டுபிடிக்கப்படும் தடுப்பூசிகளைப் பதுக்கி வைக்கக்கூடும் என்று விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து திருத்தந்தை இவ்வாறு வேண்டுகோள்விடுத்தார்.

அவரது இந்த வேண்டுகோள் கத்தோலிக்க திருஅவையின் சமூக போதனையின் அடிப்படையில் அமைந்தது.

கடுமையான தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள இந்த உலகத்தை குணப்படுத்த மனிதக் குடும்பத்திற்கு நமது கத்தோலிக்க சமூக பாரம்பரியம் எவ்வாறு உதவும் என்பதை நாம் ஒன்றாக ஆராய வேண்டும் என்றார்.

புதன்கிழமை தமது மறையுரையில், திருத்தந்தை பிரான்சிஸ் தொற்றுநோய் குறித்து மறையுரையாற்றினார். ஆகஸ்ட் 19-ம் தேதி வரை உலகளவில் 781,000க்கும் அதிகமான மக்களின் உயிரைக் கொன்றது என்று ஜான்ஸ் ஹாப்கின்ஸ் கொரோனா வைரஸ் எனும் மையம் தெரிவித்ததை மேற்கோள்காட்டினார்.

"ஒருபுறம், இந்த சிறிய ஆனால் பயங்கரமான வைரஸுக்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது அவசியம், இது உலகம் முழுவதையும் அதன் முழங்கால்களுக்கு கொண்டு வந்துள்ளது. மறுபுறம், சமூக அநீதி, வாய்ப்பின் சமத்துவமின்மை, ஓரங்கட்டப்படுதல் மற்றும் பலவீனமானவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமை போன்ற ஒரு பெரிய வைரஸை நாம் குணப்படுத்த வேண்டும்" என்று அவர் வேண்டிக்கேட்டுக் கொண்டார்.

ஏழைகளுக்கு முன்னுரிமை என்பது ஓர் அரசியல் விருப்பம் அல்ல; அது ஒரு கருத்தியல் விருப்பம், ஓர் அரசில் கட்சியின் விருப்பமும் அல்ல. ஏழைகளுக்கான பணி நற்செய்தியின் மையத்தில் உள்ளது. இதைச் செய்த முதல்வர் இயேசு. என்று திருத்தந்தை மேலும் கருத்துரைத்தார்.

கொரிந்தியருக்கு எழுதப்பட்ட இரண்டாம் கடிதத்திலிருந்து ஒரு பகுதியை திருத்தந்தை மேற்கோள்காட்டினார். அதில் "நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார். (2 கொரிந்தியர் 8: 9) எனும் புனித பவுல் அடிகளின் கூற்றை மேற்கோள்



காட்டினார். இதேபோல், இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஏழைகளுடனான நெருக்கத்தினால் அறியப்படுகிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

ஏழைகளின் சேவையானது பொருள் உதவி அளிப்பதோடு மட்டுப்படுத்தப்படக் கூடாது, அது அதற்கு மேலானது. அது முழுமனித வளர்ச்சியை உட்படுத்தியது என்று மேலும் தெளிவுப்படுத்தினார்

# திருஅவை தலைமைத்துவத்திற்குக் கீழ்ப்படிவோம் !

பொதுக்காலத்தின் இருப்பத்தியோராம் ஞாயிற்றுக்கிழமையான இன்று வழங்கப்பட்ட வாசகங்கள் 'இயேசு துன்புறும் ஊழியர்' என்ற சிந்தனையை வழங்குகின்றன. இயேசு கிறிஸ்து விண்ணகத்தின் திறவுகோளை திருத்தூதுர் பேதுரு வாயிலாக திருஅவையிடம் ஒப்படைத்துள்ளார்.

நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தன்னுடைய சீடர்களிடம் ஓர் ஆய்வினை மேற்கொள்கிறார். அது தன்னைக் குறித்து அறிந்துகொள்வதற்காக அல்ல, மாறாக சீடர்கள் தன்னை எப்படிப் புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்குத்தான். இயேசு அவர்களிடம், "நீங்கள் நான் யாரெனச் சொல்கிறீர்கள்?" என்று கேட்கின்றார். அதற்கு சீமோன் பேதுரு, "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்" என்று உரைக்கிறார்..

இயேசு பிறரைத் துன்புறுத்துகின்ற மெசியா அல்ல, மாறாக அவர் பிறருக்காகத் தன்மேல் துன்பங்களை சுமந்துகொள்ளும் மெசியா என்பதை விவிலியத்தின் பல பகுதிகள் நமக்கு எடுத்துக்கூறுகின்றன. குறிப்பாக எசாயா 50:6-ல் வாசிக்கின்றோம், "அடிப்போருக்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோருக்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோருக்கும் காரி உமிழ்வோருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை" என்று. இப்பகுதி துன்புறும் ஊழியனைக் குறித்து சொல்லப்படும் பகுதிகளுள் ஒன்று. ஆகவே, இயேசு என்னும் மெசியா மக்களுக்கு அரசியல் விடுதலையை அல்ல, ஆன்மீக விடுதலையையும், முழு மனித விடுதலையையும் தன்னுடைய பாடுகள், துன்பங்கள் வழியாக அளிக்க வந்தார் என நாம் புரிந்துகொள்ளலாம்.

பேதுருவின் பதிலால் இயேசு அவரைப் புகழ்கின்றார். அதேநேரத்தில் இதை யாரிடமும் சொல்லவேண்டாம் என எடுத்துக்கூறுகிறார். பேதுரு இயேசுவைக் குறித்து சரியாகத் தானே சொன்னார், பின் எதற்காக இயேசு அவரைப் பார்த்து இதை யாரிடமும் சொல்லகூடாது என்று சொன்னார் என்பது நமது சிந்தனைக்கு உரியதாக இருக்கின்றது. காரணம் பேதுரு இயேசுவை ஒரு அரசியல் மெசியாவாகப் பார்த்தார். பேதுரு மட்டுமல்ல, இஸ்ரயேல் மக்கள் அனைவருமே இயேசுவை அப்படித்தான் பார்த்தார்கள்.

மெசியா என்றால் தன்னுடைய அதிகாரத்தால் எல்லா நாடுகளையும், இனங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து எருசலேமைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி செலுத்துவார் என்பதுதான் யூதர்கள் நம்பிக்கையாக இருந்தது. ஆனால் ஆண்டவர் இயேசுவோ தான் அதிகாரம் செலுத்துகின்ற மெசியா அல்ல, மாறாக அன்பு செலுத்தும், மக்களின் வாழ்வுக்கு தன்னுடைய வாழ்வையே அற்பணிக்கும் மெசியா எனவும், பிறரைத் துன்புறுத்துகின்ற மெசியா அல்ல, மாறாக மக்களுக்குக்காக தன்மீது துன்பங்களை சுமந்துகொள்கின்ற துன்புறும் மெசியா என்பதை தன்னுடைய வாழ்வால் எடுத்துக்கூறுகின்றார்; அதை தன்னோடு இருந்த சீடர்களுக்குப் புரியவைக்கிறார்.

இயேசுக்கு நாமும் ஒரு பாறைதான் நம்மீதும் திருஅவை எழுப்பப்பட்டுள்ளது என்பதை நினைவில் கொள்வோம். நமது அசட்டுத்தனத்தாலும் பொறுப்பற்றத் தனத்தாலும் திருஅவைக்கான பணிகளைப் புறக்கணியாது திருத்தந்தையின் தலைமையில் கடமை வீரர்களாக பணியைத் தொடர வேண்டும்.

***-சவரிநாதன் -சுங்கைபட்டாணி***

**பொதுக்காலம் 21-ஆம் ஞாயிறு**

எசா 22: 19-23
உரோ 11: 33-36
மத் 16: 13-20

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : வாரம் I**